பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 05 வியாழக்கிழமை (21-10 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 327

# மேலதிக 5 பட்டாலியன்களை ராணுவத்தில் சேர்க்க ஏற்பாடு

## நிதி ஒதுக்கீடு செய்யுமாறு அரசாங்கத்திடம் வற்புறுத்து

கொழும்பு, ஒக்டோபர் 21

ஆகஸ்ட் மாதத்தில் திரட்டப்பட்ட பத்துப் படை அணிகளுக்கு (பட்டாலியன்களுக்கு) மேலதிகமாக இன்னும் புதிதாக ஐந்து படை அணிகள் இராணுவத்தில் உருவாக்கப்படும்.

இது குறித்து இராணுவம் அரசாங்கத்திடம் வற்புறுத்தி உள்ளதோடு அதற்கென நிதி ஒதுக்கித் தருமாறும் கேட்டுள்ளது.

அடுத்த ஒரு வருடத்துக்குள் இந்தப் புதிய படையணிகள் ஐந்தும் சேர்க்கப்பட்டுவிடும்.

இத்தகவல்களை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்னா வெளியிட்டுள்ளார்.

இராணுவ தினத்தையொட்டி அண்மையில் அனுராதபுரத்தில் நடந்த மத வைபவம் ஒன்றில் பேசுகையில் அவர் இத்தகவல்களைத் தெரிவித்தார்.

மண்கிண்டிமலைத் தோல்வியைத் தொடர்ந்து புதிதாகப் பத்துப் படையணிகளை உருவாக்குவதற்காக ஆகஸ்

(6ஆம் பக்கம் பார்க்க)

## தொப்பிகல காட்டில் உள்ள புலிகளுக்கு அரச அதிகாரிகள் உதவி செய்கின்றனராம்

### பிரிகேடியர் இறுதி எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 21

தொப்பிகல காட்டில் உள்ள விடுதலைப் புலிகளுக்கு அரச திணைக்களங்களின் சில தலைவர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உதவி வருகின்றனர். அப்படியானவர்களில் சிலர் இந்த மாநாட்டு மண்டபத்திலும் சமூகமளித்து உள்ளனர். இந்த நடைமுறை எதிர்காலத்தில் தொடருமானால் நான் கடுமையான நடவடிக்கை எடுப்பேன்

—மட்டக்களப்பு இராணுவ தளபதி பிரிகேடியர் எஸ். இ. ஆர். குணவர்த்தனா மட்டக்களப்பு கச்சேரியில் நடந்த கூட்டில் அரச திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் அரசியல் கட்சியின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட மாநாட்டில் பேசியபோது முன்கண்டவாறு எச்சரித்தார்.

மட்டக்களப்பு அரச அதிபர் ஆர். மோனகுருசாமி மாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

இந்த நிலைவரம் நீடிக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 'குவாக்கர்' சமாதானக் குழு நேற்று யாழ் வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், ஒக். 21

"குவாக்கர்" சமாதானக் குழுவின் பிரதிநிதிகள் மூவர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

விமானம் மூலம் பலாலிக்கு வந்திருந்த அவர்கள் நேற்று காங்கேசன்துறையில் இருந்து 'வாதுவ' கப்பல் மூலம் பருத்தித்துறை வந்தடைந்தனர்.

அவர்கள் இங்கு தங்கியிருக்கும்போது விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான சமாதான சூழ்நிலையை உருவாக்குவதில் உதவும் வகையில் 'குவாக்கர்' குழுவினர் ஏற்கனவே பல தடவைகள் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

இவர்கள் தயாரித்த சமாதானத் திட்டம் ஒன்றைக் கொண்டு வந்தபோதே தளபதி கிட்டு இந்தியப் படையினரின் அழுத்தத்தினால் கடலில் காவியமானார்.

தளபதி கிட்டு தாம் கையளித்த சமாதானத் திட்டத்தைக் கொண்டு வந்தார் என்பதை அப்போது உறுதி செய்த பின்னர் 'குவாக்கர்' குழுவினர் இப்போதுதான் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

(இ-5 87-178)

## வடமராட்சி கடல் பகுதியில் படையினர் பீரங்கித் தாக்கு

வல்வெட்டித்துறை, ஒக். 21

வடமராட்சி வடக்கு கடற் பகுதியில் நிலைகொண்டுள்ள பீரங்கிப் படகுகளில் இருந்து நேற்றுக்காலை 7.15 மணி அளவில் கரையோரப் பகுதியை நோக்கி தாக்குதல் நடத்தப்பட்டது.

கடற்படையினரின் தாக்குதலை அடுத்து தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் தொழிலை கைவிட்டுக் கரை திரும்பினர்.

பருத்தித்துறை, திக்கம் பொலிகண்டி, வல்வெட்டித்துறை, இன்பருட்டி, சக்கோட்டை ஆகிய பகுதிகளை நோக்கியே பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதேவேளை —

மாதகல் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் நேற்று நண்பகல் பண்டத்தரிப்பு, இளவாலை பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதலை நடத்தினர்.

(இ-109-155-87-178-5)

## சுவீடனிலிருந்து ஈழ அகதிகளை மீள அனுப்ப சூழ்நிலை சரியில்லை

### அந்நாட்டு அதிகாரிகளே ஒப்புக்கொள்கின்றனர்

கொழும்பு, ஒக் 21

சுவீடனில் உள்ள இலங்கை அகதிகளை நாடு திருப்பி யனுப்பக் கூடிய சூழ்நிலை தற்போது இல்லை என்பதால் இப்போதைக்கு அவ்வாறு செய்ய வேண்டாம் என சுவீடிஷ் அரசுக்கு சிபார்சு செய்வதாக கொழும்பு வந்துள்ள சுவீடிஷ் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

சுவீடனில் உள்ள இலங்கை அகதிகளை திருப்பியனுப்புவதற்கான சூழ்நிலை இலங்கையில் இருக்கிறதா என்பதை நேரடியாக அறிந்து கொள்வதற்காக சுவீடிஷ் அரசின் வெளியுறவு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியான எம். ஏ. லார்சனின் தலைமையில் மூவர் அடங்கிய உயர்மட்ட குழு ஒன்று கொழும்பு வந்திருந்தது.

கொழும்பில் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரச பிரதிநிதிகளை இக்குழுவினர் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

"புதிதாக நெருக்கடிகள் தோன்றியிருக்கும் யூகோஸ்லாவியா சோமாலியா போன்ற நாடுகளில் இருந்து கூடுதலான

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வாதுவவில் வந்த தபால் இன்று இறக்கப்படலாம்

பயணிகள் இணைப்புச் சேவையில் வாதுவ கப்பல் நேற்று ஈடுபட்டதால் குறைந்த அளவு பொருள்களே நேற்று பருத்தித்துறையில் இறக்கப்பட்டன.

நரோமா கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு வந்த 19 பேரை, வாதுவ கப்பல் நேற்று பருத்தித்துறைக்கு கொண்டு வந்தது.

சொற்ப அளவு பொருள்களை இறக்கி விட்டு நேற்று பிற்பகலே வாதுவ காங்கேசன்துறைக்கு திரும்பிச் சென்றது.

காங்கேசன்துறை செல்லும் போது, நரோமா கப்பல் மூலம் திருகோணமலை செல்லும் பயணிகளையும் அது பருத்தித்துறையிலிருந்து காங்கேசன்துறைக்கு ஏற்றிச் சென்றது.

வாதுவவில் எடுத்து வரப்பட்ட 611 தபால் பொதிகள் நேற்று இறக்கப்படவில்லை.

இன்று அவை இறக்கப்பட்டு நாளை விநியோகிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(இ-178-109-8-17)

## 'யாழ் தேவி' தோல்வி பற்றி எழுதிய பத்திரிகையாளருக்கு கொலைப் பயமுறுத்தல்!

கொழும்பு, ஒக். 21

"யாழ். தேவி" நடவடிக்கையில் அரசப் படைகளுக்கு ஏற்பட்ட தோல்வி குறித்து சண்டே டைம்ஸில் விவரமான கட்டுரை ஒன்றை வரைந்த பத்திரிகையாளர் இக்பால் அத்தாஸுக்கு இராணுவ உயர்மட்ட அதிகாரி ஒருவர் கொலைப் பயமுறுத்தல் விடுத்திருக்கிறார்.

அக்கட்டுரையில் கோபமுற்ற இராணுவத்தின் உயர்மட்டங்களிலிடம் அதிகாரி ஒருவர் அக்கட்டுரையை வரைந்தவரை "ரயர்" போட்டு எரிக்கப் போவதாக தொலைபேசி மூலம் எச்சரித்திருக்கிறார்.

இத் தகவலை பத்திரிகையாளர் இக்பால் அத்தாஸே வெளியிட்டார்.

இந்த மிரட்டல் சம்பவம் தொடர்பாக உடன் உரிய நடவடிக்கை எடுக்கும்படி சுதந்திரப் பத்திரிகையாளர் இயக்கம் அரசைக் கோரியிருக்கிறது.

(உ-6)

## பயணிகளுடன் கோமாரி புறப்பாடு

நெல்லியடி, ஒக். 21

கோமாரி கப்பல் நேற்று பிற்பகல் 22 பயணிகளுடன் பருத்தித்துறையில் இருந்து திருகோணமலை நோக்கிப் புறப்பட்டுச் சென்றது.

(இ-8-87-178-109)

## தமிழ் சிப்பாய் தாக்கப்பட்டார்

யாழ்ப்பாணம், ஒக். 21

அண்மையில் திருமலை கடற்படைத் தளத்தில் கடமையாற்றும் தமிழ் சிப்பாயான தனராஜ் என்பவர் கடற்படைச் சிப்பாய் ஒருவரால் தாக்கப்பட்டார். அதனால் அவரது முதுகு எலும்பு முறிந்தது.

ஸ்ரீலங்கா படைகளில் பணிபுரியும் தமிழ் ஊழியர்கள் இதுபோல தாக்கப்படும் சம்ப [illegible]

(உ-6)

## 8.250 பரல் மண்ணெண்ணெய் றுகுணு கப்பலில் வருகிறது

கொழும்பு, ஒக். 21

8.250 பரல்கள் மண்ணெண்ணெயுடன் றுகுணு கப்பல் இன்னும் ஒரு வார காலத்தில் பருத்தித்துறை வரவுள்ளது.

கால நிலையால் ஏதாவது மாற்றம் ஏற்படாத விடத்து திட்டமிட்டபடி இக்கப்பல் யாழ்ப்பாணம் போய்ச் சேரும் என புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்தார்.

## கொழும்பில் உள்ள தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப முடிவு

கொழும்பு, ஒக். 21

கொழும்பில் உள்ள அகதி முகாம்களில் தங்கி உள்ள அகதிகளில் வவுனியா, மட்டக்களப்பு, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளனர்.

இவர்களில் வட பகுதிக்கு அனுப்பப்படும் 220 அகதிகள் முதலில் வவுனியா ரயில் நிலையப் பகுதியில் உள்ள தற்காலிக முகாமில் தங்க வைக்கப்படுவார்கள். பின்னர் அங்கிருந்து படிப்படியாக சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

அதேபோன்று மட்டக்களப்புக்கு அனுப்பப்படும் அகதிகளும் முதலில் தற்காலிக முகாம் ஒன்றில் வைக்கப்பட்ட பின்பே சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-8)

---

தமிழா!
இது எம் தாயகம்
நாங்கள் மண்ணாளைந்த பூமியை
எப்படி மாற்றானிடம் கொடுப்பது?
எந்தப் படை வந்தாலும் எதிர்கொள்வோம்
சொந்தப் புலிவீரருக்கு துணைநிற்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வன்: வி: முகுந்தன்

விவேகானந்தன் — நிர்மலா தம்பதிகளின் செல்வப் புதல்வன் முகுந்தன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைச் சண்டிலிப்பாயில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரைப் பிரான்சிலிருக்கும் அன்பு அப்பா, அம்மா பண்டத்தரிப்பிலிருக்கும் அம்மம்மா, அன்ரிமார், மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார், தங்கைமார், மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர் அனைவரும் மருதடி விநாயகர் அருள் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

"மலர் வாசா"
சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு. (27728)

## வாழ்த்துகிறோம்

சராண்டு நிறைவு காணும்

### யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

வதிரி, கரவெட்டி,

ஆயகலைகளின் உறைவிடமாக
தூய கலைமகளே மலர்ந்தாயம்மா!
மழலை பேசும் மொழியுடையாளே
மலர்ந்தின்று ஆண்டுஈரிரண்டம்மா!
பெருமை பேசிடும் பெண்கள் கல்லூரி நீயென
பெருந்தக்காய்! பெருமையுடன் மலர்ந்தாயம்மா!
மலர்ந்தாய் வட மத்திய மகளிரென!
புலர்ந்தது இன்பப் பொழுதம்மா
ஆண்டு இரண்டில் அரும் சாதனைகள்
ஈண்டு குவித்தாயம்மா! எம் தாயே வாழி

க. பொ. த. (சா/த) மாணவிகள் 1993

(27720)

யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியை

## வாழ்த்துகிறோம்

சராண்டு நிறைவெய்தி
மூன்றாமாண்டில் இன்றைய தினம்
காலடி வைக்கும்,
யா/வடமராட்சி மத்தீய மகளிர் கல்லூரி
கரவைப் பகுதியின் தனித்துவம் மிகு
மகளிர் கல்லூரியாய்
பெண்ணினத்தின் பெருமை தனை எடுத்தியம்ப
ஆயிரமாயிரம் மாணவியரை
அணியணியாய் உருவாக்க
வாழ்த்துகிறோம்.

ஆண்டு "6 A" மாணவிகள்.

வதிரி,
கரவெட்டி. (27721)

உ
சிவமயம்

இந்து சமயப்பேரவை, யாழ்ப்பாணம்.

### கைதடி சைவச் சிறுவர் இல்லம்

## கொடி தினம் 10-05-93

மேற்படி கொடி தின உண்டியல் மூலமும் பட்டியல்கள் மூலமும் (இதுவரை கிடைக்கப் பெறாத 12 பட்டியல்களைத் தவிர்த்து) ரூபா இரண்டு லட்சத்து எண்பத்தோராயிரத்து தொளாயிரத்து எண்பத்து மூன்று கிடைக்கப் பெற்றுள்ளதென்றும்—

இத்தர்மப் பணிக்கு பங்களிப்புச் செய்தும் மற்றெல்லா வகையிலும் உதவிகள் புரிந்த பெரியோர்கள், வர்த்தகப் பெருமக்கள், யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அதிபர், ஆசிரிய மாணவர்கள், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், வைத்திய கலாநிதிகள், ஊழியர்கள், யாழ். அரசாங்க அதிபர், பிரதேசச் செயலாளர்கள் அரசாங்கத் திணைக்களங்களின் தலைவர்கள் ஊழியர்கள், கோட்டக் கல்விப் பிரதிப் பணிப்பாளர்கள் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணக்கர்கள், சாரணர்கள், இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ். கிளை ஆகியோருக்கு எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம். பட்டியல்களுக்கான பற்றுச் சீட்டுக்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு விரைவில் அனுப்பிவைக்கப்படும்.

நா. முத்தையா
தலைவர்
நல்லை ஆதீனம்,
நல்லூர்.
18 - 10 - 1993

சி. நாகராசா
பொருளாளர்

(இ/6858)

## லங்காதீப பத்திரிகையாளர் குழுவும் வந்தது

வடமராட்சி, ஒக். 21

நேற்று 'லாதுல' கப்பல் மூலம் பருத்தித்துறை வந்தோரில் "லங்காதீப" சிங்கள நாளிதழின் இரு செய்தியாளர்களும் ஒரு படப்பிடிப்பாளரும் அடங்குவர்.

துஷார குணரட்ண, கிருஷ்ண விஜயபண்டார, டிக்குரேலி (படப்பிடிப்பாளர்) ஆகியோரே இம் மூவருமாவர். (இ-87-178-5)

## வங்கியாளர் பரீட்சை வினாத்தாள்

வடமராட்சி, ஒக். 21

யாழ்ப்பாணத்தில் இம் மாதம் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள வங்கியாளர் பரீட்சைக்கான வினாத்தாள்கள் லாதுல கப்பல் மூலம் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

(இ 87-178)

## புகைப்பட கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ். றோட்டரக்ட் கழகம் நடத்த உள்ள புகைப்பட கண்காட்சிக்கு புகைப்படங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. எதிர்வரும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை நல்லூரிலுள்ள கம்பன் கோட்டத்தில் புகைப்படங்கள் சேகரிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (ந)

## தொலைக் கல்வி இற்றாழியர் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஒக். 21

தொலைக் கல்வி பயிற்சி நெறியின் இறுதிப் பரீட்சை, மற்றும் இற்றாழியர் பதவி உயர்வுக்கான பரீட்சை ஆகியன நாளை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

மேற்படி பரீட்சைகளுக்கான வினாத்தாள்களும், அனுமதி அட்டைகளும் நேற்று விமானம் மூலம் இங்கு வந்து சேர்ந்தன.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. துரை தியாகராஜா அவற்றை இங்கு எடுத்து வந்துள்ளார்.

இந்த பரீட்சைகளில் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் தமக்குரிய அனுமதி அட்டையை இன்று பிற்பகல் யாழ். கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(இ-5)

## ஆஸ்பத்திரியில் அஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 21

இந்திய இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்ட ஆஸ்பத்திரி ஊழியர்களின் ஆறாவது நினைவு நாள் இன்று யாழ். போதனா ஆஸ்பத்திரியில் இடம்பெற உள்ளது.

1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் 21, 22 ஆம் திகதிகளில் டாக்டர்கள் உட்பட மொத்தம் 21 பேரை இந்திய இராணுவம் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்து சுட்டுக் கொன்றது தெரிந்ததே.

யாழ். போதனா வைத்தியசாலையில் இன்று காலையில் நடைபெறும் அஞ்சலி நிகழ்வில் எக்ஸ்றே பகுதியில் வைக்கப்பட்டுள்ள 21 பேரின் திருவுருவப் படங்களுக்கும் மலரஞ்சலி, தீபாஞ்சலி என்பன நடைபெறும். ஆஸ்பத்திரி ஊழியர்கள் சாலரும் அஞ்சலி நிகழ்வில் கலந்து கொள்வர்.

அதன் பின்னர் வைரவர் ஆலயத்தில் விசேட பூசையும், கிறிஸ்தவ தேவாலயத்தில் ஆராதனையும் நடைபெறும். (அ-15-17)

## 'சாளரம்' வெளியானது

யாழ்ப்பாணம், ஒக். 21

"சாளரம்" 1993 ஒக்டோபர் இதழ் வெளிவந்துள்ளது. பொன் விழாக் கண்ட யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணிக்கர் பண்டாரவன்னியன், கோபி என்றொரு தீவு, நிலவள வளர்த்த தியாக வேள்வி முதலிய கட்டுரைகள் ... கவிதை முதலியனவும் இந்த இதழில் அடங்கியுள்ளன.

(ஈ)

யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி

## பழைய மாணவர் மன்றம்

யாப்புவிதி 25 0 (அ), (இ) இற்கிணங்க

## விசேட பொதுக்கூட்டம்

விடயம்: யாப்புத் திருத்தம்

காலம்: 21-11-93 ஞாயிறு காலை 9.00 மணி

யாப்புத் திருத்தம் தொடர்பான பிரேரணைகளை சமர்ப்பிக்க விரும்பும் பழைய மாணவர் மன்ற உறுப்பினர்கள் 29 - 10 - 93 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ அல்லது தபால் மூலமோ செயலாளர், பழைய மாணவர் மன்றம், வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

ச. ஜெகதீஸ்வரராஜா
சோ. சிவரட்ணம்
இணைச்செயலர்.

(27722)

## வைத்திய சேவை

வாதரோகமா? நரம்புத் தளர்ச்சியா? உடல் பருமனா? உடல் மெலிவா? தலைமுடி உதிர்தலா? தலைமுடி நரைத்தலா? குழந்தைகளின் ரோகங்களா? மாதவிடாய்க் கோளாறுகளா? இன்னும் எதுவானாலும் சிறந்த சிகிச்சையும், உரிய ஆலோசனையும் கிடைக்கும்.

தினமும் (சனி, ஞாயிறு உட்பட) காலை 8.30 முதல் 12.30 வரை பிற்பகல் 3.00 முதல் 6.00 வரை

டாக்டர் த சிவானந்தன்
D.A.M., R.A.M.P. (Cey)

### "சிவா வைத்தியசாலை"

884, கோவில் வீதி, நல்லூர் வடக்கு,
(முடமாவடிச் சந்தி)

(27726)

## புதிய கம்பியூட்டர் பயிற்சி வகுப்புக்கள்

Introduction to Computer
and
BASIC Language

ஆரம்பம்: 23 - 10 - 1993
25 - 10 - 1993

- ✶ வார நாட்களிலும் வார இறுதி நாட்களிலும்
- ✶ காலை, மாலை வகுப்புக்கள்

விபரங்களுக்கு:
**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14 ST. PETER'S LANE,
HOSPITAL ROAD, JAFFNA.

(கி-6416)

வடக்கு கிழக்கு உள்ளூராட்சிச் சேவை
ஓய்வூதியர் நலன்புரிச் சங்கம்

## வருடாந்தப் பொதுக்கூட்ட அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 23 - 10 - 1993 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்/வைத்தீஸ்வரா கல்லூரியில் நடைபெறும்.

சகல அங்கத்தவர்களையும், உள்ளூராட்சிச் சேவை ஓய்வூதியர்களையும் இப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எம். சண்முகம்
யாழ்ப்பாணம். கௌரவ செயலாளர்.

(27723)

உ

அகில இலங்கை சைவகுருமார்
அர்ச்சகர் பேரவை

## இலவச வகுப்புகள்

ஆரம்பம் விஜயதசமி நன்னாள்
பகல் 12 மணி

1. சமஸ்கிருதம் (கிரந்தம்)
2. கோவில் கிரியைகள் (குருபரம்பரையினர் மட்டும்)
3. ஆரம்ப சோதிடம்
4. சமஸ்கிருதம் (நாகரம்)
5. சைவசித்தாந்தம் (எல்லோருக்கும்)

23 - 10 - 93 மாலை 5 மணி வரை
விண்ணப்பங்கள் ஏற்கப்படும்

க. சோமசுந்தரம் ஐயா [அதிபர்]
செயலாளர்
அகில இலங்கை சைவகுருமார் அர்ச்சகர் பேரவை
C/o. பா ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம்,
158, கோவில் வீதி
நல்லூர் வடக்கு.

(27724)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேதீஸ்வர ஆலய இடிபாடுகள் காவல் மதிலாக மாறியுள்ளன

## இராணுவத்தின் செயல் குறித்து அறிக்கை

கொழும்பு, ஒக். 21

சேதப்படுத்தப்பட்ட ஆலயத் தலத்தில் இருந்தவேளை, தகர்த்தெறியப்பட்ட குருகுலம் போன்ற கட்டடங்களின் இடிபாடுகள் கூட மறைந்துவிட்டதை நாம் அவதானித்தோம்.

இந்தக் கற்களும் செங்கற்களும், மரத் துண்டுகளும், அகற்றப்பட்டு மாந்தைச் சந்தியின் வடக்கிலிருந்து அடம்பன் வரை செல்லும் காவல் மதில் ஒன்றை இராணுவத்தினர் கட்டினர் என்று அறிகிறோம்.

திருக்கேதீஸ்வர ஆலய புனரமைப்புச் சபையின் கௌரவ செயலாளர் திரு. எம். சரவணமுத்து கடந்த ஜூன் மாதம் 21ஆம் திகதி திருக்கேதீஸ்வர ஆலயத் தலத்துக்கு நேரடியாகச் சென்ற பின் தயாரித்த அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்து மத விவகார ராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், அமைச்சின் காரியதரிசி கே. தயாபரன் ஆகியோருடன் அவர் சென்றிருந்தார்.

அறிக்கை திருக்கேதீஸ்வர ஆலயத்தில் இராணுவம் செய்துள்ள சேதங்களை விவரமாக குறிப்பிடுகின்றது.

திரு. சரவணமுத்துவின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1948ஆம் ஆண்டிலிருந்து ஆலயப் புனரமைப்புச் சபை செய்த வேலை அனைத்தையும் இராணுவம் நாசமாக்கியுள்ளது.

கோயிலின் உள்ளே ஒவ்வொரு கதவும் உடைத்துத் திறக்கப்பட்டுள்ளது; பெறுமதியான பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன; முழு இடமும் அசுத்தமாக்கப்பட்டுள்ளது. மூலஸ்தானம் கூட திறந்த நிலையில் உள்ளது.

ஆலயப் பூசகர், வழிபாட்டாளர்கள் ஆகியோரின் இருப்பிடங்கள் உட்பட பிரதான கோயில் கட்டடத்துக்கு வெளியே உள்ள மடங்கள் உட்பட கட்டடங்கள் அனைத்தும் உடைத்தெறியப்பட்டுள்ளன.

குருகுலம் என்ற பூசகர் பாடசாலையும் முற்றாக மறைந்து விட்டது. இடிபாடுகளைக் கூடக் காணக் கிடைக்கவில்லை.

அறிக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா 90ஆம் ஆண்டு ஆவணி மாதம் 23 ஆம் திகதி நிகழ்த்திய உரையிலிருந்து பின்வரும் பகுதி மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

**போர்த்துக்கேயர் செய்த சேதத்தை ஒத்தது**

திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கு இராணுவம் செய்துள்ள சேதம் இக்கோயிலுக்கு 16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் செய்த சேதத்தை ஒத்தது. தற்பொழுது இரண்டு ஆண்டுகளாக இக்கோயிலின் பக்தர்களுக்கு வழிபாட்டுச் சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளது.

திருக்கேதீஸ்வர ஆலயம் 16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரால் முற்றாக அழிக்கப்பட்டது என்பதும் கோயில் இடிபாடுகளைக் கொண்டு அவர்கள் மன்னாரிலும் ஊர்காவற்றுறையிலும் கோட்டைகளைக் கட்டினார்கள் என்பதும் வரலாற்று நிகழ்வாகும். (உ)

# அமைதியும் சுபீட்சமும் வேண்டி

# ஐப்பசி வெள்ளி நாட்களில் பிரார்த்தனையில் ஈடுபடுக

## இந்து சமயப் பேரவை கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 21

திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் உட்பட மூடப்பட்டிருக்கும் அனைத்து இந்துக் கோயில்களும் திறக்கப்படவும் பூசைகள் தடையின்றி நிகழவும் தமிழ் மக்களுக்கு அமைதியும் சுபீட்சமும் ஏற்படவும் இறையருள் வேண்டி—

எல்லா இந்து ஆலயங்களிலும் நாளை ஐப்பசி மாத முதலாவது புனித வெள்ளிக்கிழமை தொடக்கம் மாதம் முடியும் வரையுள்ள புனித வெள்ளிக்கிழமைகளில் விசேட பூசைகளிலும் கூட்டுப்பிரார்த்தனைகளிலும் ஈடுபடுமாறு எல்லா இந்துக்களையும் யாழ். இந்து சமயப் பேரவை கேட்டுள்ளது.

இப்பிரார்த்தனைகளின் போது திருக்கேதீஸ்வரப் பதிகம் உட்பட திருமுறைகளை ஓதும்படியும்—

விசேட பூசைகளையும், பிரார்த்தனைகளையும் ஒழுங்கு செய்யுமாறும் எல்லா இந்து ஆலய அறங்காவலர்கள், பரிபாலன சபையினர், சமய நிறுவனங்கள், கோயில் முகாமையாளர்கள் அனைவரையும் பேரவை கேட்டுக் கொண்டுள்ளது.

இதே சமயம்—

இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பல திருத்தலங்கள் மூடப்பட்டு, பூசைகள் தடைப்பட்டிருப்பது குறித்தும் இந்து சமயப் பேரவை தனது ஆழ்ந்த கவலையை மீண்டும் தெரிவித்துள்ளது.

திருக்கேதீஸ்வரம் ஆலயத்தினுள் இராணுவம் புகுந்த, அதனால் பூசைகள் தடைப்பட்டு இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்றன என்றும் இ. ச. பேரவை அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. (ந)


## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 11 – 02 – 1911

மறைவு: 21 – 10 – 1988

அமரர் வீ. அப்பாத்துரை

"இறைவன் அருகில் அமர்ந்தீர் போற்றி"

தங்கள் நினைவில் வாழும்:
மனைவி, மகள், மகன்,
மருமக்கள், பேரமக்கள்,
பூட்டப்பிள்ளைகள்.

188, கண்டி வீதி,
அரியாலை.

(உ/...)



# G.A.Q. 95

பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கான வெளிவாரிப் பட்டப் படிப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

- ★ A/L இல் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும் (கலை, வர்த்தகம், விஞ்ஞானம்) பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் மேற்குறப்பட்ட பாட நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.
- ★ இதற்கான பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.
- ★ விபரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

விபரங்களுக்கு:

S. அருள்நங்கை,

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(இ-6410)


## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை - மானிப்பாய்

# 1994ஆம் ஆண்டு சந்தைகளுக்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்கு உட்பட்ட பின்வரும் சந்தைகள், இறைச்சிக் கடைகள் என்பவற்றை 1994 ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்குக் கொடுப்பதற்கான கேள்விகள் 1993-11-09ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்வி பத்திரங்களை பிரதேசசபையின் உப அலுவலகங்களில், இதன் கீழ் உள்ள அட்டவணையில் தெரிவிக்கப்பட்டவாறு கேள்வி வைப்புப் பணத்தையும், மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர பணத்தையும் செலுத்துவதன் மூலம் 1993-11-08ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை பெற்றுப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்களை இணைப்பிரதிகளில் தயாரித்து, மூலப்பிரதியை "விசேட ஆணையாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்" என்ற முகவரிக்கும், இணைப்பிரதியை "உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் எழுதப்பட்டு, அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் 1993-11-09 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது குறித்த நேரத்திற்கு முன் வலிகாமம் தென் மேற்கு பிரதேசசபையின் தலைமைப் பணியகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 1993-11-09 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்குத் தலைமை அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம். கேள்விப் பத்திரங்கள் பெறுபவர்கள் தம்முடன் அடையாள அட்டையையும் தவறாது கொண்டு வருதல் வேண்டும்.

இது சம்பந்தமான மேலதிக விபரங்களையும், நிபந்தனைகளையும் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலும், உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விசேட ஆணையாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
தலைமைச் செயலகம்,
நரமண்டபம், மானிப்பாய்,
1993 - 10 - 19.

### அட்டவணை

| உப அலுவலகம் | குத்தகையின் தன்மை | கடையின் மாத வாடகை | கேள்வி வைப்பு பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | நிர்ணயிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|---|---|
| மானிப்பாய் பட்டினம் | | | | | |
| | 1. ஆட்டிறைச்சிக்கடை (சந்தை) | 250 | 500 | 100 | 25,000 |
| | 2. மாட்டிறைச்சிக் கடை இல. 1 (சந்தை) | 250 | 500 | 100 | 50,000 |
| | 3. மாட்டிறைச்சிக்கடை இல. 2 (சந்தை) | 250 | 500 | 100 | 50,000 |
| | 4. மானிப்பாய் மத்திய சந்தை | | 500 | 100 | 66,000 |
| | 5. கட்டுடைச் சந்தை | | 300 | 100 | 500 |
| மானிப்பாய் கிராமம் | | | | | |
| | 1. சாவற்கட்டு சந்தை ஆனைக்கோட்டை | 500 | 500 | 100 | 6,000 |
| | 2. பிரசாத் சந்தை நவாலி | | 500 | 100 | 12,000 |
| | 3. காக்கைதீவுச் சந்தை ஆனைக்கோட்டை | | 500 | 100 | 5,100 |
| | 4. மாட்டிறைச்சிக் கடை (பிரசாத் சந்தை) | 100 | 500 | 100 | 42,000 |
| | 5. ஆட்டிறைச்சிக் கடை (பிரசாத் சந்தை) | 100 | 500 | 100 | 10,000 |
| | 6. ஆட்டிறைச்சிக் கடை (சாவற்கட்டு சந்தை) | 250 | 500 | 100 | 10,000 |
| பண்டத்தரிப்பு கிராமம் | | | | | |
| | 1. மாசியப்பிட்டி சந்தை | | 300 | 100 | 11,000 |
| | 2. மாசியப்பிட்டி மாட்டிறைச்சிக் கடை | 100 | 300 | 100 | 18,800 |
| | 3. மாசியப்பிட்டி ஆட்டிறைச்சிக் கடை | 100 | 500 | 100 | 10,500 |

(இ-...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

முட்டையிடும் கோழிகள் விற்பனைக்கு உண்டு. வை. ஜெயமுருகன், இல: 48/1. நெடுங்குளம் றோட், அரியாலை. (27712)

இந்தியாருடே, ஆண்டு மலர் 93-94 (முத்தமிழ் இலக்கிய விருந்து), உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள். தீபாவளிக் கார்ட் வகைகள் மொத்தமாகக் கிடைக்கும். வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு. மக்மிலன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (இ-6430)

மாக் 25 எஞ்ஜினில் தயாரிக்கப்பட்ட ஜெனரேற்றர் கொண்டென்சருடன், ஒடியோ ஸ்ரீறியோ 100w வெவிலூம் Box உடன், உஷா 2 வாசித் தையல் மெஷின்; 1 கவசாகி K.H 100 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: முகாமையாளர், படமாடம், அருச்சனா வீதி, யாழ்ப்பாணம். (6547)

### வகுப்புக்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம் ரஸிகரஞ்சன சபாவில் ஒவ்வொரு சனி ஞாயிறும் நடைபெற்றுவரும் சங்கீத வகுப்புக்களில் புதிய மாணவர்கள் விஜயதசமி அன்று பிற்பகல் 2 மணிக்குள் சேர்க்கப்படுவர். வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம், நடனம் ஆகிய பகுதிகளில் ஆரம்பம்; முதல் ஆசிரியதரம் வரை கற்பிக்கப்படும். (27716)

### பாலராசிரியர் பயிற்சி

பாலராசிரியராகப் பயிற்சி பெற க. பொ. த. (சா/த) கல்வித் தகைமை. நேர்முகத்தை முடிந்தோர் தபாலிலும் கற்கலாம். ஆரம்பம்: 23-10-1993. பாலராசிரியர் சங்கம், 78, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (6546)

### G. C. E. (A/L) - 94

மேற்படி G.C.E. (A/L) 94 வகுப்பிற்கான கலை, வர்த்தக 93ஆம் ஆண்டு புள்ளி வழங்கல் திட்டம் விற்பனையாகிறது. அறிவகம் புத்தகசாலை, வெலிங்டன் சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம். (இ 6427)

### ஆண்டு - 4 பரீட்சை

ஆண்டு 4 மாணவர்களுக்கு (புலமைப் பரிசில் 1994) மாதிரித் தொடர்பரீட்சை 18ஆவது 23-10-93 சனி முற்பகல் 8.00, முற்பகல் 11-00 நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும். விபரத்தாள்களையும் பெற்றுக்கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (27718)

### யாழோசை வகுப்புகள்

சகல புதிய இசை வகுப்புகளும் விஜயதசமி அன்று (24-10-93) காலை 9 மணிக்கும் மாலை 4 மணிக்கும் ஆரம்பிக்கப்படவுள்ளன. மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்: யாழோசை, 61, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (27680)

### வியாழன், சனி மாற்றம்

அக்டோபர் வியாழன், சனி மாற்றங்களும் நவம்பர் 10 இல் திரும்பவும் (கும்பத்திற்கு) சனி மாற்றமும், சத்யாவின் எண்ஜோதிடமும் ரூபா 10/- எங்கும் விற்பனையாகின்றது. ஆனந்தம் 21/B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். நூலாசிரியர் Prof சத்தியதாஸன். (6697)

### "சக்தி பசளை"

சக்தி ஓர் இயற்கைப் பசளை. கம்பெட்டு முறையில் தயாரித்தது. வீட்டுத் தோட்டத்திற்கு ஓர் வரப்பிரசாதம். மண்வளம் பெருக்கி விளைச்சலை அதிகரிக்கிறது. அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. பக்கற் ஒன்று ரூபா 9/-. 25 பக்கற் கொண்ட பெட்டி ஒன்று ரூபா 200/- மட்டுமே. "மின்னைற்" (இ 6254)

### ஜீவாகாரம்

வளரும் குழந்தைகள் முதல் தாய்மையுறும் தாய்மார்கள் அனைவருக்கும் முழுநிறைவான சமவிகித போஷாக்குணவு - ஜீவாகாரம். கிடைக்குமிடம் அண்ணா கோப்பிக் கடை யாழ்ப்பாணம், திருநெல்வேலி, இணுவில். (இ/6426)

# 6ஆவது ஆண்டு நினைவஞ்சலி

1987ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21, 22ஆம் திகதிகளில் இந்திய இராணுவ நடவடிக்கையால் யாழ். பொது வைத்தியசாலையில் கடமையின் போது உயிர்நீத்த கீழ்வரும் உத்தியோகத்தர்/ஊழியர்களுக்கு வைத்தியசாலைப் பணிப்பாளரும், உத்தியோகத்தர்/ ஊழியர்களும் தங்கள் நினைவஞ்சலியைச் செலுத்துகின்றார்கள்.

1. வைத்திய நிபுணர் எஸ். சிவபாதசுந்தரம்
2. வைத்திய கலாநிதி கே. பரிமேலழகர்
3. வைத்திய கலாநிதி கே. கணேசரத்தினம்
4. திருமதி பா. வடிவேலு
5. செல்வி லீலாவதி முத்தையா
6. செல்வி மங்கையர்க்கரசி இராமநாதன்
7. திரு. கே. செல்வராஜா
8. திரு. கே கிருஷ்ணராஜா
9. திரு மு. துரைராஜா
10. திரு. வி. சண்முகலிங்கம்
11. திரு. வி. வரதராசன்
12. திரு. கே. வேதாரணியம்
13. திரு. ஜோன் பீற்றர்
14. திரு. இ. குமார்
15. திரு. க. சிவலோகநாதன்
16. திரு. எஸ் ஜெகநாதன்
17. திரு. கே. சிவராசா
18. திரு. கோ. உருத்திரன்
19. திரு. க மார்க்கண்டு
20. திரு. இ. இரத்தினராசா
21. திரு. க. நவரத்தினம்

பொதுவைத்தியசாலை
யாழ்ப்பாணம்.

(இ/6242)

## புதிய நூல்களின் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ் மாநகராட்சி மன்றப் பொதுசன நூலகத்துக்கென்று தருவிக்கப்பட்ட புதிய நூல்களின் கண்காட்சி நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் கிளை நூலகத்தில் யாழ் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையால் ஆரம்பித்து வைக்கப்படும்.

நூற்கண்காட்சி நாளையும் நாளை மறுதினமும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும்.

(க-17)

## கட்சியுடன் முரண்படுகிறார் காமினி பொன்சேகா!

"நான் எவருக்கும் தலைவணங்க மாட்டேன் என்மீது துன்புறுத்தலை மேற்கொள்ளும் ஐக்கிய தேசியக் கட்சியினர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்."

— உபசபாநாயகர் காமினி பொன்சேகா முன்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பில் ரோட்டரிக் கழகக் கூட்டம் ஒன்றில் பேசும் போது அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

உபசபாநாயகர் என்பவர் சாதாரண எம்.பிக்கு மேலான அந்தஸ்தில் உள்ளவர்: எல்லாப் பிரச்சினைகளிலும் அவர் எந்தக் கட்சியுடனும் இணைந்து செல்ல வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது.

"ஊழல் பற்றி விசாரணை செய்ய ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி எம்.பி ஒருவர் கொண்டு வந்த பிரேரணை நாடாளுமன்றத்தில் வாக்களிப்புக்கு விடப்பட்ட சமயத்தில் நான் பதில் சபாநாயகராக பணிபுரிந்தேன்; ஐ.தே.க.வின் மாத்தறை மாவட்ட எம். பியாக அச்சமயம் நான் அங்கு இருக்கவில்லை. நாடாளுமன்றத்தில் தெரிவுசெய்யப்பட்ட சபாநாயகர் சுதந்திரமானவர்; மக்களுக்கு மட்டும் தான் சபாநாயகர் பதில் சொல்ல வேண்டியவர் - இவ்வாறு காமினி பொன்சேகா மேலும் தெரிவித்தார்.

(க-ச)

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

# 1994ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் அதிகார எல்லைக்கு உட்பட்ட பின்வரும் சந்தைகள், இறைச்சிக்கடைகள், கடைகள் என்பவற்றை 1994ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு கொடுப்பதற்கான கேள்விகள் 1993-11-10ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் வலிகாமம் தெற்கு பிரதேசசபைச் செயலாளரால் கேள்வி வைப்புப்பணம், கேள்விப்பத்திரப்பணம் ஆகியன செலுத்தியதன் பேரில் 1993-11-09ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை வழங்கப்படும்.

கேள்விப்பத்திரங்களை இணைப்பிரதிகளில் தயாரித்து, மூலப்பிரதியை, "விசேட ஆணையாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்" என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை "பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்." என்ற முகவரிக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குத்தகையின் பெயர் எழுதப்பட்டு அரக்கு முத்திரை இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் 1993-11-10ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது குறித்த நேரத்திற்கு முன் வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 1993-11-11ஆம் திகதி பிற்பகல் 2-00மணிக்கு தலைமை அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம். கேள்விப் பத்திரங்கள் பெறுபவர்கள் தம்முடன் அடையாள அட்டையையும் தவறாது கொண்டு வருதல் வேண்டும். தனியார் காணிகளில் இறைச்சிக்கடை நடத்துவதற்கு காணிச் சொந்தக்காரரிடம் அனுமதிக்கடிதம் பெற்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இது சம்பந்தமாக மேலதிக விபரங்களையும் நிபந்தனைகளையும் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

அட்டவணை

| குத்தகை விவரம் | மாத வாடகை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|---|
| **1. சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 1. சுன்னாகம் மத்திய சந்தை | — | 100 | 1000 | 8,46,500 |
| 2. சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை | 100 | 100 | 1000 | 2,21,000 |
| 3. சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை | 100 | 50 | 500 | 22,000 |
| 4. உடுவில் மீன் சந்தை | — | 50 | 500 | 4,500 |
| 5. உமல், கடதாசி விற்பனை செய்யும் உரிமை | — | 15 | 500 | 1,800 |
| 6. கருவாட்டுக்கடை இல. 3 | 60 | 15 | 100 | 2,350 |
| 7. " " 4 | 60 | 15 | 100 | 7,050 |
| 8. " " 5 | 60 | 15 | 100 | 6,200 |
| 9. " " 6 | 60 | 15 | 100 | 2,800 |
| 10. " " 7 | 60 | 15 | 100 | 2,800 |
| **2. உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 1. மருதனார்மடம் சந்தை | — | 50 | 1000 | 83,000 |
| 2. இணுவில் சந்தை | — | 50 | 1000 | 5,600 |
| 3. தாவடி மாட்டிறைச்சிக் கடை | — | 25 | 100 | 52,000 |
| 4. தாவடி ஆட்டிறைச்சிக் கடை | — | 25 | 100 | 56,000 |
| 5. உடுவில் மல்வம் மாட்டிறைச்சிக் கடை | — | 25 | 100 | 38,000 |
| 6. உடுவில் ஆவடி மாட்டிறைச்சிக்கடை | — | 25 | 100 | 72,500 |
| 7. இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | — | 25 | 100 | 80,000 |
| 8. தாவடி தெற்கு மாட்டிறைச்சிக் கடை | — | 25 | 100 | 84,000 |
| 9. இணுவில் சந்தை வெளிக்கடைகள் | | | | |
| 1. கடை இல. 122 | — | 25 | 100 | 900 |
| 2. " " 8 | — | 25 | 100 | 500 |
| 3. " " 9 | — | 25 | 100 | 500 |
| 4. " " 18 | — | 25 | 100 | 900 |
| **3. ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 1. மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடை | — | 50 | 800 | 55,000 |
| 2. ஏழாலை தெற்கு சந்தை | — | 25 | 50 | 500 |

தனுஜா தணிகாசலம்,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
19 - 10 - 1993

(இ-2035)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# தொண்டமானின் புத்திமதி

சாதாரண சிங்கள மக்களே முடிவுகளை எடுக்கிறார்கள் என்று கூறுவது முற்றிலும் பொய்யானது. அமைச்சர்களே முடிவுகளை எடுக்கிறார்கள். தமிழர்களின் உரிமைகளை வழங்குவதற்குச் சிங்களத் தலைவர்கள் விரும்பவில்லை என்பதே உண்மை.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் அமைச்சர் தொண்டமான். லண்டனில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் இப்படிக் கூறியுள்ளார்.

தமிழர்களுக்கு அவர்களின் பிறப்புரிமைகளில் ஒன்றைக் கூட வழங்குவதற்கு எந்தச் சிங்களத் தலைவர்களும் எப்போதும் விரும்பியதில்லை. தமிழர்களை இரண்டாந்தரப் பிரசைகளாக வைத்திருப்பதே அவர்களின் முழு விருப்பமும் ஆகும்!

இலங்கையின் கடந்த ஐம்பது ஆண்டு கால அரசியல் போக்குகளைக் கூர்ந்து அவதானித்த எல்லோருக்குமே இந்த உண்மை தெரியும். அரசியலில் நீண்ட கால அனுபவம் உள்ளவர் என்ற வகையிலும், தென்னிலங்கைச் சிங்களத் தலைவர்களுடன் நெடுநாளைய நெருங்கிய உறவு கொண்டவர் என்ற வகையிலும் தொண்டமான் இந்த உண்மையைக் கூறும்போது அது வலுப்பெறுகிறது.

மேலும் தமிழர்களின் உரிமைகளை வழங்குவதற்குச் சிங்களத் தலைவர்கள் தயாராக உள்ளார்கள், வழங்குவார்கள் என்று நம்பும் லண்டன் போன்ற வெளிநாடுகளில் ஸ்ரீலங்கா அமைச்சரவையின் உறுப்பினராக இருந்து கொண்டு தொண்டமான் உண்மையை எடுத்துச் சொல்லும் போது அதற்கு ஒரு விசேட கனதி உண்டு.

இந்த உண்மையை வெளி உலகத்தவர்களை விடத் தமிழர்கள் தான் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். தமிழர்களின் உரிமைகளைச் சிங்களத் தலைவர்கள் எவரும், எப்போதும் வழங்கப் போவதில்லை. இதனை இப்பத்தியில் அடிக்கடி கூறிவருகிறோம். அவர்கள் தருவார்கள் நாங்கள் வாங்கலாம் என்று எண்ணக் கூடாது. எமது உரிமைகளை நாமே எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதற்காக தமிழர்கள் எல்லோரும் ஒரே அணியில், ஒரே தலைமையின் கீழ் அணி திரண்டால் மட்டுமே அவர்களால் தமது உரிமைகளை எடுத்துக் கொள்ள முடியும்.

இதனை அனுபவசாலியான அமைச்சர் தொண்டமான், அழுத்திக் கூறுகிறார்.

எல்லாத் தமிழர் உரிமைக் குழுக்களும் ஒன்றுபட வேண்டும். தமிழர் உரிமைகளை இப்போது பாதுகாப்பவர்களின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும். சுதந்திரப் போராளிகளை காட்டிக் கொடுப்பதைப் போட்டிக் குழுக்கள் நிறுத்த வேண்டும் —

தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியலைத் துறக்க வேண்டும். போராட முடியவில்லை என்றால் வேறு வழியில் போராட்டத்தை ஆதரிக்க வேண்டும். தமிழர்கள் ஐக்கியமாகச் செயற்பட்டால் தான் அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குச் சிங்களவர்கள் சிந்திப்பார்கள் — என்று அவர் தெளிவாக்கியுள்ளார்.

இந்த உண்மையை, கொழும்பில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளும், குழுக்களும் இனியாவது உணரவேண்டும். அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. ஒரு தலைமைத்துவத்தின் கீழ் தமிழர்கள் போராடினால் உரிமைகளைப் பெற்றுக் கொள்வது மிகவும் இலகுவானது.

இது விடயத்தில் அவர்கள் உதவி செய்யாவிட்டாலும், அதற்கு மனத்தயக்கம் இருந்தால், உபத்திரமாக மாறாமல் ஒதுங்கிக் கொண்டால் போதுமானது. தமிழர்களின் வெற்றிக்கான முதற்படியாக அது அமையும்.

### தேடுதல் ஒரு புறத்தில்; மறுபுறத்தில்

# கொழும்பில் தமிழ் இளைஞர் ஆயுதக் குழுக்களால் கடத்தல்

கொழும்பு, ஒக். 21

கொழும்பில் படையினரின் தேடுதல் ஒரு புறம்!

சிவில் உடையில் வருவோர் வீட்டில் இருப்போரை பெயர் சொல்லி அழைத்து கடத்திச் செல்வது மறுபுறம்!!

இவ்வாறு கூட்டிச்செல்லப்படுவோர் திரும்பாததால் அவர்களின் உறவினர்கள் அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று விசாரிக்கிறார்கள். ஆனால் அங்குள்ள அதிகாரிகள் தங்களுக்கு எதுவும் தெரியாது என்று கைவிரித்து விடுகிறார்களாம்.

இதேவேளை —

கொழும்பில் விசாரணை என்ற பெயரில் இனந்தெரியாத நபர்களினால் தமிழ் இளைஞர்கள் கடத்திச் செல்லப்படும் சம்பவங்கள் மீண்டும் ஆரம்பித்திருப்பதாக பொலிஸ் தலைமைக் காரியாலயத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது;

இருளப்பனை பொலிஸ் பகுதியில் உள்ள எலிமண்டன் வீதி இலக்கம் ஒன்றில் இருந்து கடந்த ஞாயிறு அதிகாலை மனோரஞ்சன் என்ற இளைஞன் இவ்விதம் ஆயுதமேந்திய இனந்தெரியாத நபர்களினால் விசாரணைக்கென வாகனத்தில் கூட்டிச் செல்லப்பட்டதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று பம்பலப்பிட்டி பொலிஸ் பகுதியில் இரு தமிழ் இளைஞர்கள் இதே இனந்தெரியாத நபர்களால் விசாரணைக்கென கூட்டிச் செல்லப்பட்டுள்ளனர்.

தற்போதுள்ள சட்டவிதிகளின் படி ஒரு நபரை விசாரணை செய்ய அழைத்துச் செல்வதானால் சம்பந்தப்பட்ட விசாரணை அதிகாரி தனது அடையாள அட்டையை காண்பிக்க வேண்டும். அத்துடன் சந்தேகநபரை அழைத்துச் செல்வதற்கான குறிப்பு ஒன்றையும் வீட்டில் இருப்போருக்கு எழுத்தில் வழங்க வேண்டும்.

இந்த விதிகளுக்கு முரணாக இவர்கள் கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு தெமட்டகொடையில் இருந்து கடத்திச் செல்லப்பட்ட — அக்கரைப்பற்றைச் சேர்ந்த — திருநாவுக்கரசு ரவீந்திரராஜா என்ற இளைஞரின் சடலம் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் நீர்கொழும்பு நகரத்தில் கிடக்கக் காணப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

(உ-8)

### கொழும்பில் நடுநிசி வேளையிலும் தேடுதல்:

# துயில் உடையுடன் நிற்க வைத்து தமிழ்ப் பெண்கள் மீது சோதனை!

கொழும்பு, ஒக். 21

ஆழ்ந்த நித்திரையில் இருப்பவர்களை எழுப்பித் தட்டி எழுப்பி இரவு துயில் ஆடைகளுடன் நிற்க வைத்து ஆண்கள், பெண்கள் படையினரால் சோதனை செய்யப்படுவதாக கொழும்பு நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பிலும், அதன் சுற்றுப் புறங்களிலும் முப்படையினரும், பொலிஸாரும் கூட்டாக நடத்தும் தேடுதல் வேட்டைகள் திங்கட்கிழமை அதிகாலை வரையும் இடம் பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

தெஹிவளை, வெள்ளவத்தை, நீர்கொழும்பு, வத்தளை பகுதிகளில் குறிப்பிட்ட சில இடங்களை திங்கட்கிழமை நள்ளிரவுக்கு பின்னர் முற்றுகையிட்ட படையினர் விடிய விடிய தேடுதல் மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மக்கள் ஆழ்ந்த நித்திரையில் இருக்கும் போது கதவைத் தட்டித் திறக்கும் பொலிஸார் ஆண்கள், பெண்கள், அனைவரையும் துயில் உடையில் நிற்க வைத்து அடையாள அட்டை, பொலிஸ் நிலைய பதிவுகள் குறித்து விசாரிப்பதாகக் கூறப்படுகிறது.

வருடக்கணக்காக ஒரே வீட்டில் வசித்து வந்தோர் கூட பொலிஸில் பதிவு செய்யாத காரணத்துக்காக, கைதாகி மேல் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு கூண்டுக் அடைக்கும் 'புதுமை' இப்போது இடம்பெறுவதாக வும் —

கொழும்பு அண்டர்ஸன் தொடர் மாடி வீட்டில் அந்த வீட்டுத்திட்டம் ஆரம்பமானது முதல் வசித்து வரும் அரச ஊழியர் ஒருவர் கூட பொலிஸில் பதிவு செய்யாத காரணத்தை முன்வைத்து குடும்பத்தாருடன் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார் என்றால் தேடுதலின் 'வேகத்தை' எவரும் புரிந்து கொள்ள முடியும் என்றும் — கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

வத்தளையில் உள்ள சிங்களவர் தமது வீட்டில் வாடகைக்கு குடியிருந்த தமிழ்க் குடும்பம் பற்றிய விபரங்களை பொலிஸில் பதியாத காரணத்தால் குடியிருப்பாளர்களுடன் வீட்டுக்காரரும் கைதாகி அழைத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-8)

### தலைநகர் கொழும்பில்

# கைதானோரில் 100 பேர் புலிகளுடன் தொடர்பாம்

## அவர்களில் 49 பேர் பெண்கள்

கொழும்பு, ஒக். 21

கொழும்பில் கடந்த வாரம் கைது செய்யப்பட்ட 800 தமிழர்களில் நூறு பேர் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் நேரடித் தொடர்புடைய தீவிர உறுப்பினர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளனராம்.

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி 'த ஐலண்ட்' பத்திரிகை இப்படிச் செய்தி வெளியிட்டிருக்கிறது.

800 தமிழர்களையும் பொலிஸாரும், தேசிய புலனாய்வுப் பிரிவினரும், குற்றவியல் பணியகத்தினரும் விசாரணை செய்ததைத் தொடர்ந்தே நூறுபேரும் அடையாளம் காணப்பட்டனர் என்றும் —

அவர்களில் 49 பேர் பெண்கள் என்றும் —

அவர்கள் அனைவரும் தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் — அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

கொழும்பு மாநகரில் உள்ள பல்வேறு பொலிஸ் நிலையங்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள இச்சந்தேக நபர்களை செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகள் பார்வையிட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-எ-6)

# கைதுகளை நிறுத்த தொண்டா கோரிக்கை

கொழும்பு, ஒக். 21

"கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இடம்பெறும் அநாவசிய கைதுகளை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்"

அமைச்சர் தொண்டமான் மேற்கண்ட கோரிக்கையை அரசுக்கு விடுத்துள்ளார்;

கடந்த வாரம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் பங்குபற்றியபோதே அமைச்சர் இக்கோரிக்கையை விடுத்தார் என கொழும்பு நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(ஓ-8)

# முகத்துவாரம் கடலில் சுழியோடி ரவைகள் மீட்பு

கொழும்பு முகத்துவாரம் கடலில் சுழியோடிகள் நடத்திய தேடுதலில் டி 56 ரக தன்னியக்க துப்பாக்கிகளுக்குப் பாவிக்கும் ரவைகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வாரம் "டெனிம்" உள்ளாடையில் பொருத்தப்பட்டிருந்த குண்டு கைப்பற்றப்பட்ட முகத்துவாரம் கடற்கரைப் பகுதியிலேயே பேலியகொடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் சுழியோடிகள் தேடுதல் நடத்தினர் என்றும் —

அப்போது சுழியோடிகள் கொண்ட 90 ரவைகள் கண்டு பிடிக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே முகத்துவாரம் பகுதியில் வீடு ஒன்றிலும் துப்பாக்கி உட்பட சில ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என்பது தெரிந்ததே.

(ஓ-8)

# நவராத்திரி

யாழ்ப்பாணம், ஒக். 21

கருணாகரப் பிள்ளையார்? அருள்மிகு ஞானவைரவர் சுவாமி கோவிலில் நடைபெற்று வரும் நவராத்திரி விழாவில் இன்று சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். பேராசிரியர் அ. சண்முகதாஸ் சமயச் சொற்பொழிவாற்றுவார். சுழிபுரம் ஸ்ரீ தேவி குழுவினரின் வில்லிசையும் இடம் பெறும்.

(ஸ)

o o o

யாழ்ப்பாணம் அத்தியடிப் பிள்ளையார் கோவிலில் நடைபெற்று வரும் நவராத்திரி விழாவில் இன்று வியாழக்கிழமை "சக்தியின் மகிமை" என்னும் பொருளில் கவிஞர் கதிர் சரவணபவன் சமயச் சொற்பொழிவாற்றுவார்.

(க-161)

o o o

இலங்கை மின்சார சபையின் சுன்னாகம், காங்கேசன்துறை ஊழியர் நலன்புரிச் சங்கமும் சுன்னாகம் பிரதேசக் காரியாலயமும் சேர்ந்து நடத்தும் நவராத்திரி விழா சுன்னாகம் பிரதேசப் பொறியியலாளர் அலுவலகத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

இவ் விழாவில் சிவத்திரு க. குமாரசுவாமி, திரு ஆறு. திருமுருகன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

(ஸ)

o o o

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானத்தில் வாணி விழாவை ஒட்டி இன்றும் சிவஸ்ரீ திரு. வீ. குமார

# நாளை

யாழ்ப்பாணம், ஒக். 21

பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு தமிழ் விழா இடம்பெற உள்ளது.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

தமிழ்க் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் விழாவில் பிரதம பேச்சாளராகக் கலந்து கொள்கிறார்.

(இ)

o o o

யாழ்ப்பாணம், ஒக். 21

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு பண்டிதர், சைவப்புலவர் சிவஸ்ரீ. கை. நமசிவாயக்குருக்கள் "முருகனிடம் போவோம்" என்னும் பொருளில் உரை நிகழ்த்துவார்.

(ஸ)

# அரச அதிபர் ஜனாதிபதியுடன் பேசுவார்

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ். பல்கலைக்கழக அனுமதியில் யாழ். மாணவர்கள் அடைந்துள்ள பாதிப்புக் குறித்து யாழ். அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுடன் பேச்சு நடத்தவிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

தற்சமயம் கொழும்பில் தங்கியுள்ள அரச அதிபர் இவ்வார இறுதிக்கு முன்னர் ஜனாதிபதியைச் சந்தித்து இவ்விடயம் குறித்து விலாவாரியாகப் பேசி, மாணவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பை நீக்கக் கோருவார்.

இதேவேளை —

கொழும்பு சென்றிருந்த வேளை பல்கலைக் கழக அனுமதி தொடர்பாக பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுத் தலைவரை சந்திக்கத் தாம் முயற்சித்ததாகவும் —

ஆணைக்குழுவின் உப-தலைவரின் மறைவால் அது கைகூடாமல் போனதாகவும் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா நேற்றுத் தெரிவித்தார்.

(அ-8)

# விழாக்கள்

சாமி "அபிராமி அந்தாதி" பற்றி தொடர் சொற்பொழிவாற்றி வருகின்றார் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்று வருகின்றன.

(ஓ-89)

o o o

மக்கள் வங்கி யாழ். பிரதேசத் தலைமையக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஆதரவில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நவராத்திரி விழா நடைபெறுகிறது.

யாழ் கல்விக் கோட்டப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் சொற்பொழிவாற்றுவார். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

(அ)

o o o

நல்லூர் அறிவொளி கல்விக் கழக நவராத்திரி விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை வெள்ளிக்கிழமை பி. ப. 3 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். கல்விக் கோட்டப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் தம்பதிகள் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

(அ)

o o o

கொழும்புத்துறை மேற்கு மாதர் அபிவிருத்திச்சங்கத்தினரின் நவராத்திரி விழாவும், பரிசளிப்பு விழாவும் இன்று பி. ப. 5.30 மணிக்கு கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெறும். யாழ். மாவட்டப் பிரதி ஆணையாளர் திரு. த. வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(அ-17)

பொருளாதாரத்தடை இங்கு போட்டதனால்
விளைச்சல் நிலமிங்கு விளைவைக் குறைத்திடுமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக விவசாயிகள் தினம்

யாழ்ப்பாணம், ஒக். 21

அனைத்துலக விவசாயிகள் தினம் இன்றாகும்.

அதனை முன்னிட்டு பனை தென்னை வள கூட்டுறவு நிறுவனங்களும், பனை அபிவிருத்திச் சபையும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள விழா நிகழ்ச்சிகள் இன்று முற்பகல் 10 மணிக்கு நல்லூர் சட்டநாதர் வீதியில் உள்ள யாழ் இளைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பனை, தென்னை வள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும், பனை அபிவிருத்திச் சபை வழிநடத்தல் குழு உறுப்பினருமாகிய திரு. இ.சபாரத்தினம் தலைமையில் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி தேசிய கொடியை ஏற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைப்பார்.

யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பணிப்பாளர் ஆகியோர் வாழ்த்துரையாற்றுவர்.

''மனிதகுல வளர்ச்சியில் விவசாயத் தொழில் வளம்'' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக் கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும்—

''மரபுடைமைவிவசாய சமூகத்தின் மாறும் மாண்புகள்'' என்ற தலைப்பில் யாழ் பல்கலைக் கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் கா. சிவத்தம்பியும் சிறப்புரையாற்றுவர்.

விவசாயிகள் ஒய்வூதியத் திட்டத்தில் இணைந்தவர்களுக்கான உறுதிப் பத்திரம் வழங்கும் வைபவமும், பரிசளிப்பு நிகழ்ச்சியும் விழாவில் இடம் பெறவுள்ளன. அத்துடன் சங்கீத பூசணம் பொன். சுந்தரலிங்கத்தின் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறும்.

# எமது சமுதாய வளர்ச்சிக்கு தொழிற்கல்வி மிக அவசியம்

## பேராயர் ஜெபநேசன் வலியுறுத்து

மாணவரின் மூளைக்கு கல்வி அளிக்கும் எமது சமுதாயம் உள்ளத்துக்கும் கரங்களுக்கும் ஏற்ற தொழிற் கல்வி அளிக்க முன்வரவேண்டும். எமது சமுதாய வளர்ச்சிக்கு தொழிற் கல்வி இன்றியமையாதது. மிகவும் அவசியமானது.

பேராயர் அதிவணக்கம் எஸ். ஜெபநேசன் இவ்வாறு கூறினார்.

அண்மையில் நடைபெற்ற உடுவில் மகளிர்கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

உடுவில் மகளிர்கல்லூரி அதிபர் செல்வி இ. வி. செல்லையா தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் வண. ஜெபநேசன் மேலும் கூறியதாவது;

மேலை நாடுகளில் வைத்தியரை விட ஆசிரியர்களுக்கு அதிக சம்பளம் வழங்கப்படுகிறது. இங்கு அந்நிலை இல்லை. ஒரு சாதாரண சிப்பாய் பெறும் சம்பளம் கூட ஆசிரியருக்கு கிடைப்பதில்லை. இலங்கை தேசிய சம்பள ஆணைக்குழு கருத்திற்கொண்டு சரியான திட்டங்களை முன்வைத்து வேறுபாடுகளை நீக்க வேண்டும்.

பல்கலைக்கழகங்களில் விஞ்ஞான கல்வி கற்கும் ஒருவர் கட்டாயமாக கலைத்துறை சார்ந்த ஒரு பாடமும் பயில வேண்டும். மாணவருக்கு இலக்கியம், நாடகம், வரலாறு போன்ற கலைத்தை வளப்படுத்தும் கல்வி வழங்கப்பட வேண்டும் — என்று சொன்னார்.

அதிபர் செல்வி சி. வி. செல்லையா, அதிபர் அறிக்கையை சமர்ப்பித்தார் மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

(க-152)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னத்துரை சரஸ்வதி அம்மா

யாழ்ப்பாணம் நாவலர் வீதி, இல 177 ஐ சேர்ந்த திருமதி சரஸ்வதி அம்மா 14-10-93 அன்று கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற தபாலதிபர் C சின்னத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. திருமதி பொன்னையாவின் அன்பு மகளும் கோகம்மாவின் அன்புச் சகோதரியும், நடராசா (இளைப்பாறிய சிவில் நிர்வாக உத்தியோகத்தர் இலங்கை விமானப்படை கங்குநாயக்கா - U. S. A), பாலசுப்பிரமணியம் (பிரதான முகாமையாளர் மக்கள் வங்கி சர்வதேசப் பிரிவு - கொழும்பு) ஆகியோரின் அருமைத் தாயாரும், தேவி (U. S. A.) ராஜேஸ்வரி (Australia) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற வசந்தி, சசிகலா (நீர்கொழும்பு), சரவணபவான் (U. S. A.), வத்சலா, மகேரதன் (Australia), முரளிதரன் (Australia) ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், பைரவி, சாலினி, நிதர்சன், விண்டா, சஞ்சே, கவின் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 18-10-93 திங்கட்கிழமை களத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
S. சிறி

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

(27719)

## மூத்து முருகுப்பிள்ளை

பளை வீமன்காமத்தை சேர்ந்த மூத்து முருகுப்பிள்ளை (கணக்காய்வாளரும் ஓய்வுபெற்ற இறைவரி மதிப்பீட்டாளரும், 22-09-93 இல் லண்டனில் காலமானார்

இவர் இராஜராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜோதி (U. K), விஜயகுமார் (மெல்போர்ன் - அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், டாக்டர் N. W. விஜயபாலன் (U. K), பிரியசாந்தி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரித்தானியாவில் வசிப்பவர்களான பிரபாலி, ஜொனி, அவுஸ்திரேலியாவில் வசிப்பவர்களான விக்னேஸ், கபிலன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான வைரவப்பிள்ளை, செல்லையா, மற்றும் சின்னத்துரை (முன்னைநாள் மத்திய வங்கி), செல்லம்மா காசிவிஸ்வநாதன் ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் U. K இலுள்ள கொவென்றியில் 27-09-93 இல் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மூ சின்னத்துரை

(27729)

# கோரிக்கை

புதுடில்லி, ஒக். 21

இலங்கை கடற்பரப்புக்குச் சென்று மீன் பிடிப்பதைத் தவிர்க்குமாறு இந்திய மீனவர்களை இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் வி. எஸ். செகாவாத் கேட்டுக் கொண்டார். (உ-9)

# கோழிகளுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ்ப்பாணம் குருசோ வீதியில் உள்ள கிறீன் மெமோரியல் சனசமூக நிலையத்தில் வைத்து இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கோழிகளுக்கு தடுப்பூசி போடப்படும். (உ)

## மேலதிக...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாதத்தில் பத்தாயிரம் பேர் புதிதாகச் சேர்க்கப்பட்டது தெரிந்ததே;

சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில் சேர்வதற்குத் தயக்கம் காட்டியமைத் தொடர்ந்து ஆட்சேர்ப்புக்கான கல்வி மற்றும் உடல் நிலைத் தகைமைகள் வெகுவாகக் குறைக்கப்பட்டதும், சம்பளம் அதிகரிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

ஆண்டில் சேர்க்கப்பட்டவர்கள் இப்போது பயிற்சி பெற்று வருகிறார்கள். அவர்களுக்கு மேலதிகமாகவே புதிதாக ஐயாயிரம் பேரைச் (5 படையணிகளைச்) சேர்ப்பதற்கு இராணுவம் அரசிடம் நிதி உதவி கோரி உள்ளது.

ஏற்கனவே இராணுவத் துருப்புகளின் எண்ணிக்கை 80,000 ஆக இருந்தது. ஆண்டில் நடந்த ஆட்சேர்ப்பின் பின் அந்த எண்ணிக்கை 90,000 ஆக உயர்ந்தது. இதனை ஒரு லட்சமாக அதிகரிக்க வேண்டும் என்பது இராணுவ உயர் அதிகாரிகளின் நோக்கம்.

இதேவேளையில் —

அடுத்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்துக்கு முன்பு திருகோணமலைக்கு முடிவு கட்டி, நாட்டில் அமைதியும் சௌஜன்யத்தையும் இராணுவம் நிலைநாட்டும் என்றும் இராணுவத் தளபதி அனுராதபுர வைபவத்தில் கூறினார்.

யாழ்தேவி ராணுவ நடவடிக்கை எமக்கு பல படிப்பினைகளைத் தந்துள்ளது. முறையான திட்டமிடல் இருப்பின் வெற்றியை அடைய முடியும் என்பதை இந்த இராணுவ நடவடிக்கை நிரூபித்துள்ளது என்றும் அவர் சொன்னார்.

பண்டைக் காலச் சிங்கள அரசர்கள் போருக்குப் போவதற்கு முன்னர் தமது கொடிகளுக்கு மும்மணிகளின் ஆசியைப் பெறுவதற்காக சமயச் சடங்குகளை நடத்துவது வழக்கம் என்றும் —

அந்த மரபைப் பின்பற்றியே தாம் இராணுவத்தினதும் படையணிகளின் கொடிகளை மகாபோதி மரத்தின் ஆசிகளைப் பெறும் வைபவத்தை ஏற்பாடு செய்ததாகவும் — இராணுவத் தளபதி கூறினார். (அ-எ)

## கவிடனிலிருந்து

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் கனடாவுக்கு வருவதை இலங்கை அகதிகளை கட்டுப்படுத்த வேண்டியுள்ளது.

இதனால் அகதிகள் அந்தஸ்து வழங்கத் தகுதியில்லாத இலங்கைஅகதிகளை எவ்வாறெனினும் திருப்பியனுப்பத்தான் வேண்டும்.

எனினும் கனடாவில் உள்ள இலங்கை அகதிகளை நாடு திருப்பியனுப்பக் கூடிய சூழ்நிலை தற்போது இல்லை என்பதால், இப்போதைக்கு அவ்வாறு செய்யமாட்டோம்'' என கனடிய அரசுக்கு சிபாரிசு செய்வதாக அந்தக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

தம்மை திருப்பியனுப்ப வேண்டாம் என்றுகோரி 150 இலங்கைத் தமிழ் அகதிகள் அங்கு உண்ணாவிரதம் இருந்து வருவது தெரிந்ததே. (ஒ-8)

## புலிகளுக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மானால் தீவிரவாதப் பிரச்சினைக்கு இரண்டாயிரமாவது ஆண்டிலும் தீர்வுகாண முடியாது என்றும் பிகேடியர் கூறினார்.

ஒருவர் தினமும் 5 கிலோ சீனியும், 20 கிலோ அரிசியும் எடுத்துச் சென்றால் அவர் மீது சந்தேகம் எழும், [illegible]

(க-எ)

விடுதலைப் புலிகளின்

# கொலைப் பயமுறுத்தல் தம்மை தடுத்து நிறுத்தாதாம்

## இராணுவத் தளபதி கூறுகிறார்

கொழும்பு, ஒக். 21

வடக்கு - கிழக்கு யுத்தத்தை தாம் வழி நடத்துவதை விடுதலைப் புலிகளின் கொலைப்பயமுறுத்தல் தடுத்து நிறுத்தாது என்று இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலைப் பகுதிகளுக்கு விஜயம் செய்த முதலாவது மற்றும் இரண்டாவது கஜபா ரெஜிமென்ட படையினர் மத்தியில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

நாட்டின் இறைமை, பிரதேச ஒருமைப்பாடு, ஐக்கியம் ஆகியவற்றை உறுதிப்படுத்தக் கூடியதாக இந்த யுத்தத்தை வெற்றியீட்ட வேண்டும். இதுவே தளபதி என்ற முறையில் எனது நோக்கமாகும்'' — என்று அவர் கூறினார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு:

# அமெரிக்காவில் ரணிலிடம் துருவித்துருவி விசாரிப்பு

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வாஷிங்டனில் அமெரிக்க அரச அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களின் போது, இலங்கையில் மனித உரிமை பேணல் மற்றும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் தேவை ஆகியன பற்றியே அமெரிக்க அதிகாரிகள் திரும்ப திரும்ப துருவித்துருவி விசாரித்து அறிந்து கொண்டனர்.

அத்துடன் விடுதலைப் புலிகளுடனான யுத்தத்துக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டிய அவசியம் குறித்தும் அமெரிக்க அதிகாரிகள் வலியுறுத்தினர்.

வாஷிங்டனில் உள்ள 'டெய்லி நியூஸ்' செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இதனை ஒப்புக் கொண்டார்.

இலங்கையில் மனித உரிமை நிலைவரத்தை அபிவிருத்தி செய்வதற்கு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் பற்றி அமெரிக்க அதிகாரிகளுக்கு விளக்கப்பட்டதாகவும் பிரதமர் கூறினார்.

இதற்கிடையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது ஒரு வார கால அமெரிக்க விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் சைப்பிரஸ் புறப்பட்டார்.

சைப்பிரஸில் நடைபெறும் கொமன் வெல்த் நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் இலங்கை சார்பாக அவர் கலந்து கொள்வார்.

(இ-ஈ-168)

பல்கலைக்கழக அனுமதி பாதிப்பு

# மாணவர் தனித்தனியாக ஜனாதிபதிக்குக் கடிதம்

1992 ஏப்ரலில் நடைபெற்ற ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக அனுமதியில் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்கள், தமது நிலையை விளக்கி, நியாயம் வழங்குமாறு, தனித்தனியாக ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்ப உள்ளனர்.

நேற்று யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

நேற்றைய கூட்டத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களுடன் பெற்றோர் மற்றும் நலன் விரும்பிகளும் பங்குபற்றினர்.

பாதிக்கப்பட்ட மாணவர் ஒருங்கிணைப்பு ஒன்றியம் என்ற அமைப்பு நேற்றைய கூட்டத்தில் உருவாக்கப்பட்டது.

பிரஸ்தாப ஒன்றியத்தினர் பாதிக்கப்பட்ட மாணவர்கள் நடத்த உத்தேசித்துள்ள எதிர்ப்பியக்கங்கள் குறித்து பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று விளக்குவதுடன், மாணவர், ஆசிரியர்களின் ஆதரவையும் திரட்டுவர்.

ஆர்ப்பாட்டப் பேரணி, வகுப்புப் பகிஷ்கரிப்பு ஆகியவற்றை அடுத்த வாரத்தில் நடத்த உத்தேசிக்கப்பட்டது. நாளை மீண்டும் கூடி திகதியை நிர்ணயிப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது.

ரூ. 50 லட்சம் நிதி கிடைத்தது!

# வன்செயலில் பாதிப்புற்ற குடும்பங்களுக்கு நஷ்டஈடு

## விரைவில் வழங்க ஏற்பாடு

யாழ் மாவட்டத்தில் வன்செயல் சம்பவங்களால் இறந்த ஆக்கைது காணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்க 50 லட்சம் ரூபாவை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு வழங்கியுள்ளது.

கொழும்பில் இருந்து திரும்பிய யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் இத்தகவலை தெரிவித்தார்.

நிவாரணம் வழங்குவது தொடர்பான நிதிக்கான குறை நிரப்புப் பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேறியுள்ளதால் மீண்டும் நிவாரணத் திட்டக் கொடுப்பனவுகளை வழங்க புனர்வாழ்வு அமைச்சு முடிவு செய்திருந்தது (ஒ-8)

10 மாதங்கள் முடிவடைந்தும்

# உணவு முத்திரைகளுக்கு பால்மா கிடைக்கவில்லை!

வலிகாமம் மேற்கு, ஒக். 21

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவின் வறுமை நிவாரண உணவு முத்திரை பெற்ற குடும்பங்களின் ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட பால்மாவிற்கான உணவு முத்திரைகளுக்கு 10 மாதங்கள் முடிவடைந்தும் இதுவரை பால்மாவோ அல்லது வேறு உணவுப்பொருள்களோ வழங்கப்படவில்லை

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தினால் சுமார் 600 குழந்தைகளுக்கு பால்மாவிற்கான உணவுமுத்திரைகள் 1992ஆம் ஆண்டு மார்கழி மாதத்தில் இருந்து 1993ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் வரை செல்லுபடியான பால்மா உணவுமுத்திரைகள் வழங்கப்பட்டன.

ஆனால் இன்றுவரை இந்த உணவுமுத்திரைகளுக்கு பால்மாவோ அல்லது வேறு உணவுப் பொருள்களோ சமாசவை ப. நோ. கூ. சங்கத்தினரால் வழங்கப்படவில்லை. மக்கள் உணவுமுத்திரைகள் செல்லுபடியான காலமும் முடிவடையப் போகின்றன.

மாதம் ஒன்றுக்கு 50 ரூபா பெறுமதியான உணவுமுத்திரைகள் வழங்கப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ். செயலகம், இந்த உணவு முத்திரைகளுக்கு பால்மாவையோ அல்லது வேறு பொருள்களையோ தமக்கு இதுவரை வழங்கவில்லை என்று சங்கானை ப. நோ. கூ. சங்கத்தினர் தெரிவித்தனர். (ஒ-175)

இப்பத்திரிகை திரு. உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் [illegible] இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 21-10-1993 [illegible] வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org